*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.


# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 15TH AUGUST, 1980 No. 33

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



*Subscription*

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.

*Apply to:*
**The Manager,**
'Morning Star',
VADDUKODDAI.


## Christa Seva Ashram, Chunnakam

A Course on *Deeper Inner Life and Christion Yoga* has been arranged by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar, to be held at the Ashram from the 24th to the 30th of August, 1980.

Bishop Sundereson who is deeply involved in this ministry will conduct this course. All those who wish to attend the course are requested to contact Sevak Sam Alfred.

Only a limited number will be taken for the course.

*The Ashram Anniversary*

The 41st Anniversary celebrations will take place on 21-8-80. The Day's progrmme will commence at 6 a. m. with a Holy Communion Service which will be followed by a Baptism and a Service of Thanksgiving.

The Programme will wind up with a Public Meeting commencing at 4 p. m.

*High Lights*

The Ashram *Newsletter* which we have received gives us an account of events at the Ashram during the year of review. Among the high lights were *a Cross Culture Programme of the Lanka Theological College, Pilimatalawa* at the Ashram from the 7 to the 19th of May, 1980 and the *Whitsun Festival of Prayer* at which the speaker was Rev. Thomas Thangarajah of the Tamilnadu Theological College, Madurai.

Sevak Rev. S. Selvaratnam (Periannan) was remembered at a special Service of Holy Communion on 29-3-80 and Rev. I. T. Yesusahayam (Sinnannan) at a Holy Communion Service on 30-12-79.

On 5-5-80, a Service of Thanksgiving was held at the Ashram Chapel in memory of Mrs. Annaratnam Alfred (Sevak Sam Alfred's mother).

*IN BRIEF*

- O Today marks the Second Anniversary of the Mahaveli Project, in Sri Lanka.
- O No resolutions have been passed at the Eighth Commonwealth Educational Conference held at the BMICH in Colombo from August 5 to 13, on the subject of *Britain's raising of tuition fees for overseas students.* It was felt that the resolution may impinge on the relations between the Member States.

## Iranian Bishop Aide held

Miss Jean Weddell (58), a former British Secretary to the Anglican Bishop of Iran is being detained for questioning by the Revolutionary Prosecution Office in Isafahan in Central Iran.

She was seriously wounded in Teheran last May a few days before the 24-year old son of the Bishop was murdered.

*Church of North India*

## Fourth Synod to decide on Women's Ordination

The Church of North India at its *Fourth Synod* to be held in October this year, is expected to give "a clear, unambiguous and unqualified decision" on the ordination of women so that no communicant member of the CNI is debarred from offering to the ordained ministry, purely on ground of sex.

Regarding the election and training of Ministers (Presbyters), the CNI constitution (clause c) states:—

> "The acceptance for training by the Diocesan Council, through a candidates' Committee appointed by it, after such examination as may be considered necessary. In the acceptance of a candidate, regard shall be paid to the likelihood of his future regular employment as a Minister."

All that the Synod action would do is that the candidates' Committee referred to in (c) shall not reject any candidate on the basis of the candidate being a woman.

*Jaffna College*

## Junior School Sports Meet

The 12th Annual Inter House Athletic Meet of Jaffna College Junior School was worked out in the form of a 'mini olympics' to coincide with the opening of the 22nd Olympics so as to give the little ones an idea of some of the age old traditions, associated with this singular International Sports event.

The Chief Guests were Mr. K. Arunasalam, Principal of Victoria College and the President of the Lions Club, Vaddukoddai and Mrs. Arunasalam. The day's events got off sharp on time at 2-30 p. m. with the Chief Guest mounting the dais to take the salute at the smart March Past of the four squads representing tde participating Houses.

For the first time the Olympic flag kept fluttering along with the other flags. The March Past was followed by the Captains both Boys and Girls bearing the Olympic torch, covering the 400 metres, planting the torch on the specially erected pedestal, and then taking the traditional oath. The Meet was then declared open by the Chief Guest. A noteworthy feature of the Meet was the releasing of a few pigeons and some gas filled baloons in red, green, blue and white bearing the colours of the Houses.

Mr. A. Kadirgamar, Principal, welcomed the Chief Guest and introduced him as the President of the Lions Club, Vaddukoddai and also an Old Boy of the College. Mr. Arunasalam contributed a

*(Continued on last page)*

*Jaffna Christian Provident Society*

## 88th Annual General Meeting

The following Office Bearers were elected for the ensuing year:

President: Rev. Sam Thampoe
Secretary: Mr. W. N. Thevakadadcham
Treasurer: Mr. C. J. Eliathamby

Other Members of the Committee:

Mr. B. M. Thangarajah
Mr. J. B. Arumainayagam
Mr. P. E. Thanarajasingam
Mr. K. Paramalingam
Mr. S. R. Ganesharajah
Mr. T. Gunaseelan


St. John's College, Jaffna

## Wanted

A dynamic and qualified librarian to make the library relevant to the School community.

Please apply on or before the 30th of August.

Principal


## Engagement

**Charmini Thevaseervatham — Jeevachandran Thambirajah**

The engagement is anounced of CHARMINI THEVASEERVATHAM, daughter of Mr. and Mrs. E. Thevaseervatham of Wellawatte and grand daughter of S. S. Muttiah, J. P. Nunavil, Chavakachcheri to JEEVACHANDRAN THAMBIRAJAH


## "JAFFNA — 1980"

(Sri Lanka)
By
**Dr. W. R. Holmes**

The Book is now available for sale.

Price:
Rs. 40/-; US $ 6; £ 3; Malaysian $ 10.

Available at:
The CISRS., Ashram, Chunnakam.
Jaffna College, Vaddukoddai.
C. L. S. Book Shop, Jaffna.

C. I. S. R. S.,
Christa Seva Ashram,
Maruthanamadam,
Chunnakam.


## Women Dominate FTZ

Twenty three industries are now in production in the Free Trade Zone according to news reports. Of some 8000 jobs created by these industries, more than 90 per cent are held by women.

In the garment industry 95 per cent are women. The electronic industries too are expected to absorb a large number of women

## IN MEMORIAM

IN EVERLOVING MEMORY OF

**Rose Gnanamany Rajakulasingham**

Departed: 14th August, 1974

*"The eternal God is thy Refuge and underneath are the everlasting arms."*

Remembered by her loving husband and son.

Groussault Road,
Jaffna.


## Hospital Secretary

Applications are being received for the post of a Hospital Secretary in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Applicants should have previous administrative experience and should be below 50 yrs. of age. It is essential that the applicants should have a thorough knowledge of accounts and be able to manage Office correspondence independently.

Applications should be addressed on or before **31-8-80.**

To:-

THE MEDICAL SUPERINTENDENT,
GREEN MEMORIAL HOSPITAL,
MANIPAY.



St. John's College & Chundikuli Girls' College, Jaffna.

## Admissions — 1981

1. Vacancies (St. John's College) ONLY in the following Grades: One, Four, Six and Nine.
2. Vacancies (Chundikuli Girls' College) ONLY in Grade one.
3. Children born between 1-2-75 and 31-1-76 will only be considered for admission to Grade One.
4. Pupils to be considered for admission to Grades Four, Six and Nine should be below the age of ten, twelve and fifteen respectively.
5. Apply before 15th September on forms available from the respective Schools from the 1st of September 1980.
6. Please send stamped addressed long envelope and Postal Order for Rs. 2/- per Form.
7. Admission Test (for Grades Four, Six and Nine only) at 8-30 a. m. on Saturday 11th October, 1980.
8. Scholarships available for pupils who do exceptionally well at the admission test.

Principals

# உதயதாரகை
## UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

"குழந்தை உள்ளத்தை இளந்து விடாதவனே உயர்ந்த மனிதன்."

— மென்சியஸ் (சீன)


மலர் 140 ] 15 — 8 — 1980 [ இதழ் 33


## வாலிபர் வாரம்

ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி முதல் 23-ந் திகதி வரை தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் வாலிபர் வாரமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இன்றைய வாலிபர் நாளைய தலைவர். வாலிபர்களைச் சரியான பாதையில் நெறிப்படுத்தாத திருச்சபை அழிவின் பாதையை நோக்கி அவசரம் அவசரமாகப் போய்க்கொண்டிருக்கின்றது என்பதிற் சந்தேகமில்லை. ஒரு சந்ததியின் வாலிபர்களின் ஆன்மீக வளர்ச்சியைக் கவனியாது விடுங்கள், பின்னர் எப்படித்தான் முயன்றாலும் திருச்சபையில் வளர்ச்சியைக் காணமுடியாது என்று அறிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

கல்லூரிகள் திருச்சபையின் ஆளுகைக்குட்பட்டிருந்த காலத்தில், கிறிஸ்த வாலிபர்கட்கு நல்ல பயிற்சி கல்லூரிகள் வாயிலாக வழங்கப்பட்டன. SCM, JICCF, YMCA, போன்ற ஸ்தாபனங்கள் கல்லூரிகட்கூடாக நல்ல பணியைச் செய்து வந்தன. கல்லூரிகளின் நிர்வாகத்தை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் கல்லூரிகளில் கிறிஸ்த வாலிபருக்கு அதாவது திருச்சபையின் வருங்காலத் தலைவர்கட்கு நல்ல பயிற்சி அளிக்கப்படவில்லை. கல்லூரிகளில் ஓரிரு ஆசிரியர்கள் தமது சொந்த ஆர்வத்தினால் கிறிஸ்தவ இயக்கங்களை நடாத்தி வந்தனர். இத்தகைய சூழலிலேதான் திருச்சபையின் சமயக்கல்விக்குழுவும், வாலிபர் சம்மேளனமும் மலர்ந்தன. வாலிபர் பாசறைகள், விழாக்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. குறுகிய காலத்தில் திருச்சபையின் சமயக்கல்விக் குழு ஆற்றிய சேவைகள் பாராட்டுக்குரியன.

வாலிபர் பலர் இன்று ஆன்மீகத்திலும், சமயத்திலும் பெரும் ஆர்வம் கொண்டு விளங்குகின்றனர் பிரச்சனைகளும் கொந்தளிப்பும் நிறைந்த உலகில் அமைதியையும் சாந்தியையும் நாடி உணர்ச்சிமிக்க திருச்சபைகட்குச் செல்கின்றனர். பிரச்சனைகளினால் அல்லற்படும் வாலிபர்களுக்கு வேண்டிய வழிநடத்துதல் அளிப்பது திருச்சபையின் கடமை. இயேசுவின் அன்பை அவர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களைத் திருச்சபையின் ஒளிவிளக்குகளாக்குவது வளர்ந்தோரின் தலையாய பொறுப்பாகும்.

## வரவேற்பு மங்கல விழா
### வரணி

வரணித் திருச்சபையின் குருத்துவப் பணிபுரியும் வண M. J. இராஜகுலேந்திரன் அவர்கள் குரு பட்டாபிஷேகம் பெற்றதின் சார்பாக வரணி ஆலயத் திருமுன்றலில், 9-8-80 சனிவாரம் மாலை நாலு மணியளவில், சேகரக்குரு வண. D. C. இரத்தினசிங்கம் அவர்கள் தலைமையின் கீழ் வரணித் திருச்சபையோரால் நடத்தப்பட்டது. இவ்விழாவில் (1) "யாரை நான் அனுப்புவேன்; யார் நமது காரியமாகப் போவான்?" (ஏசாயா 6 : 8) (2) "நீங்கள் என்னைத் தெரிந்தெடுக்கவில்லை, நான் உங்களைத் தெரிந்தெடுத்தேன். நீங்கள் போய்க் கனி கொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும், நான் உங்களை ஏற்படுத்தினேன்." (யோவா. 15 : 16) (3) "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்". (1 கொரி. 13 : 10).

இம்மூன்று திருவசனங்களையும் முன்வைத்து திரு. D. J. பொன்னுத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

கப்ரின் ஜலின் பாக்கியநாதன் அவர்கள் அபிஷேகம் எனும் விஷயம்பற்றி ஒரு சிறு சொற்பொழிவாற்றினர்.

"வரணி குடத்தனைச் சபையும் நானும்" எனும் விஷயத்தை முன்வைத்து அருள் திரு. இராசகுலேந்திரனவர்கள் சொற்பொழிவாற்றியதோடு, தனது மனமார்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டார்.

நன்றியுரை:- காரியதரிசி திருமதி M. அருளானந்தம் நன்றியுரை கூறினார். ஐக்கிய தேனீர் விருந்துடன், தலைவரவர்களது வாழ்த்துதலோடு கூடிய தேவாசீர்வாதத்துடன் வைபவம் இனிதே நிறைவேறியது.

— D. J. பொன்னுத்துரை
வரணி

## வாழ்வு தந்தாய்

மலைமீது வாழ்வு தந்தாய் மாதவா-என்
தலையாலே தாழ்பணிந்தேன் ஆதவா
நிலையான வாழ்விய தூயவா-உலகில்
ஒளியான வழியானாய் மாதவா.

ஒளியான வழியான் நடந்திட-பாரில்
புவியானாய் நாரியாரும் மீண்டிட
அழியாத வழியானாய் புவியில்-நானென்
ஒளியாகி நீதியாகி உலகில்வாழ. [ரும்

கரை காணாப்படகாய் அலைந்தார்க்கு-
வாழ்வின்
கரை காட்டும் கலங்கரையா
யமைந்தோனே
புரையோடிப் போன நெஞ்சோர்க்கு
வாழ்வில்
புரைமாற்றும் மருந்தாக அமைந்தோனே.

தரை கட்டிக்கப்பலாய் வாழ்ந்தோர்க்கு-
நற்செய்தி
கரை காணாதோடவே செய்தாயிங்கு
உன்தார உரையை உலகிலென்றும் - தம்
உளமார ஏற்றார்க்கு உயர்ந்தாயங்கு.

அரசரடி - ஜீவன்

## உவின்சிலோ அகராதி மீண்டும் பிரசுரம் செய்யப்பட்டது

சென்னையிலுள்ள ஜோப் அன் கொம்பனி என்னும் பிரசுராலயம் உவின்சிலோ அகராதியை மீண்டும் பிரசுரம் செய்துள்ளனர். இதன் விலை 240/- இந்திய ரூபாய் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

## கலாநிதி
## எச். ஆர். ஹொய்சிங்டன்

அமெரிக்கன் மிஷனரிமாரின் வருகைக்கும் ஈழத்தில் அவர்களாற்றி வந்த பணிக்கும் 1821-ல் தேசாதிபதியாகப் பதவியேற்ற சேர். எட்வேட் பார்ன்ஸ் முட்டுக்கட்டையாகவிருந்தார். எனவே 1819-ம் ஆண்டிற்குப் பின்னர் புதிய மிஷனரிமார் வரமுடியவில்லை. 1830-ல் இலங்கைக்கு விஜயம் செய்த கோல் புறூக் விசாரணைக் குழுவினர் வட்டுக்கோட்டை செமினரிக்கும் சென்று அமெரிக்கன் மிஷனரிமாரின் பணியைப் பரிசிலனை செய்தனர். இதன் பின்னர் அமெரிக்கன் மிஷன்மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட தடைகள் யாவும் நீங்கின. அத்தகைய சூழலில் முதன்முதலாக வந்த மிஷனரிமாரில் ஒருவர் வண. கலாநிதி எச். ஆர். ஹொய்சிங்டன், எம். ஏ., டி. டி.

வட்டுக்கோட்டை செமினரியே இவரது பணிக்களமாக விளங்கியது. 1836-ல் கலாநிதி டானியல் புவர் மதுரைக்குச் சென்ற பின்பு கலாநிதி ஹொய்சிங்டன் வட்டுக்கோட்டை செமினரியின் அதிபரானார். 1841-ம் ஆண்டு வரை செமினரி அதிபர் பதவியை அலங்கரித்த பின்னர் உடல்நலக் குறைவினால் அமெரிக்கா சென்றார் விஞ்ஞானத்தில் அதிக ஈடுபாடுடையவராதலின் அமெரிக்காவிலிருந்தபொழுது வட்டுக்கோட்டையில் ஒரு வானியல் ஆய்வுகூடத்தினை அமைப்பதற்கு நிதி சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். 1844-ல் இலங்கைக்குத் திரும்பி மீண்டும் வட்டுக்கோட்டை செமினரியின் அதிபரானார். செமினரி அதன் புகழின் உச்சக்கட்டத்தினை அடைந்தது இக்காலகட்டத்திலேயாகும்.

1848-ல் செமினரிக்கு விஜயம் செய்த இலங்கையின் குடியேற்ற நாட்டுச் செயலர் சேர். எமர்சன் ரெனன்ற் தாம் எழுதிய "இலங்கையிற் கிறிஸ்தவம்" என்ற நூலில் "வட்டுக்கோட்டை கல்வி ஸ்தாபனம் ஐரோப்பிய பல்கலைக் கழகங்கள் பலவற்றுடன் சரிசமமாக நிற்கக்கூடியது" என்று எழுதி வைத்தார். கலாநிதி ஹொய்சிங்டன் இடைவாத்திரமான தேகமில்லாதவராயிருந்தாலும், சிறந்த மதிநுட்பமும் ஆராய்ச்சித் திறனும், விரிந்த மனப்பான்மையும் வாய்க்கப் பெற்றவர். சைவ சித்தாந்தத்தை இவர் கற்றுத் தேறியதனைப் போல இலங்கையிலே பணிபுரிந்த எந்த மிஷனரியும் கற்றுத் தேறவில்லை.

ஆனால் கலாநிதி ஹொய்சிங்டனினால் நீண்டகாலம் பணியாற்ற முடியவில்லை. அடிக்கடி ஏற்பட்ட நோய்களும் ஓயாத உழைப்பும் அவருடைய உடல் நலத்தைப் பெரிதும் பாதித்தன. 1849-ல் தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு அமெரிக்கா சென்ற ஹொய்சிங்டன் மீண்டும் இலங்கைக்குத் திரும்பவில்லை. அவர் இலங்கையில் பதினொரு வருடகாலமே பணியாற்றிய பொழுதும் நிலைத்து நிற்கக்கூடிய சாதனைகள் பலவற்றைச் செய்து முடித்தவர்.

## செய்திச் சிதறல்

### பரீட்சையில் சித்தி பெற்றார்

மானிப்பாய்ச் சபையைச் சேர்ந்தவரும், திரு. I. C. லோறன்ஸ், திருமதி லோறன்ஸ் ஆகியோரின் புத்திரியுமான செல்வி கிறிஸ்ரீனா மணிமேகலை தென்னிந்தியாவில் ஸ்டெலா மாறிஸ் கல்லூரியிலிருந்து சென்னைச் சர்வகலாசாலையின் B. Sc. பட்டப் பரீட்சையில் முதற் பிரிவிற் சித்தி பெற்றுள்ளனர். இவர்களின் பிரதான பாடம் உயிரியலாகும். இவர்கள் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவி.

### சாவகச்சேரி நவீன சந்தை

புதிதாக அமைக்கப்பட்ட சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டிடம் சென்ற வெள்ளிக்கிழமை 15-8-80 காலை எம். பி., வி. என். நவரத்தினம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது: இந்த நவீன சந்தை 25 லட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 78 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### ஞாபகார்த்த ஸ்தோத்திர ஆராதனை

சாவகச்சேரி திருச்சபையைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி கிருபை சரவணமுத்து பேரிலும், அவர் மகள் காலஞ்சென்ற சாந்தம் பாலரத்தினம் பேரிலும் ஒரு ஞாபகார்த்த ஸ்தோத்திர ஆராதனை சென்ற புதன்கிழமை (13-8-80) சாவகச்சேரித் தேவாலயத்தில் நடைபெற்றது. இவ்வாராதனையை வண. கே. எஸ். ஜெயசிங்கம் நடாத்தினார். அத்தியட்சர் மகாகனம் டி. ஜே. அம்பலவாணர் அருளுரை வழங்கினார். கிருபையக்காவின் துடிதுடிப்பும் பயன் நிறைந்ததுமான ஜீவியம் பற்றித் திரு. I. P. துரைரத்தினம் பேசினார். திருமதி சாந்தம் பாலரத்தினம் அவர்களது இனிமையான சுபாவம், தாழ்மை பொறுமை பற்றித் திருமதி ஜெயமணி கிருபைநாயகம் பேசினார். ஆராதனை முடிவில் குடும்பத்தினரால் சமூகமளித்தவர்களுக்கு தேனீர் விருந்து குருமனை முன்றலில் வழங்கப்பட்டது.

### கீரிமலையில் புதிய தங்குமடம்

கீரிமலையில் நவீன வசதிகளைக்கொண்ட தங்குமடம் ஒன்றை அமைப்பதற்குக் கட்டிடத் திணைக்களம் முன்வந்துள்ளது. கீரிமலைக் கேணியை ஆளமாக்கித் துப்பரவுபடுத்தி புனர் நிர்மாணம் செய்யவும், கடற்கரையோரமாக நீராடுவதற்கும் சமய ஆசாரங்களை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியைப் புனிதப்பிரதேசமாக அங்கீகரிக்க, இந்து சமய விவகார அமைச்சர் திரு. செ. இராசதுரையைக் கோருவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

### யாழ்ப்பாணத்தில் மகாகனம் சொலமன் துரைசாமி

தென்னிந்திய திருச்சபையின் பிரதமப் பேராயர் மகாகனம் சொலமன் துரைசாமி வருடாந்த கோட்டைக் கூட்டங்களில் பிரசங்கம் செய்ய யாழ்ப்பாணம் வந்துள்ளார். ஞாயிறு (10-8-80) காலை இவர் உடுவிலிலும், மாலை வட்டுக்கோட்டையிலும் பிரசங்கம் செய்தார்.

## பரிசுத்த யாக்கோபு ஆலயம், நல்லூர் 152 வது ஆண்டு நிறைவு விழா

இவ்விழா ஆடி 25-ம் திகதி வெள்ளிக்கிழமை பரி யாக்கோபுவின் திருநாளோடு ஆரம்பமாகி, ஞாயிற்றுக்கிழமை 27-ம் திகதி பிரதிஷ்டை ஆராதனையோடு முடிவடைந்தது. கூட்டங்களில் படிக்க விசேஷ பாட்டுகள் புத்தகமாக அச்சடிக்கப்பட்டு விற்கப்பட்டது. செல்வி நனதேவி, திருமதி ஆனந்தனாயகம், செல்வன் சர்மா ஆகியோர் பாட்டுகளுக்குப் பக்கவாத்தியம் வாசித்ததன் பயனாகப் பாட்டுகள் பக்திபரவசமாக இருந்தது. கொழும்பு பரிசுத்த மீகாவேல் முதலிய சகல தேவதூதர்களின் ஆலயப் போதகராகிய அருள்திரு ஜெ. ஆர். ரத்னனாயகம் கூட்டங்களில் கடவுள் தூதைக் கூறினார்கள். அன்னாரின் பேச்சுகளின் விசேஷ குறிப்புகளாவன :- இன்று அநேகர் கடவுள் இல்லை என்று அல்லது மனிதன் தன் சாயலாகக் கடவுளை உருவாக்குகிறான் என்பது தவறு. கடவுளே தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். இயேசுக் கிறிஸ்துவிலே கடவுளைக் காண்கிறோம். இயேசுக் கிறிஸ்து பாடுபட்டு உயிர்த்தெழுந்ததால் இன்றும் நம் மத்தியிலிருக்கிறார். இன்று அவரை எவ்விதமாக அறிவது? உலகத்தில் மற்றவர்களை அறிவதுபோல், இயேசுவை அவர் முகச்சாடையினாலோ, உடையினாலோ, நடை பாவனையினாலோ அறியமுடியாது. ஆகிலும் அவரை மிகவும் நெருங்கினவராக அறியலாம். அவர் நம்மோடும், நமக்குள்ளும் இருக்கிறதை அறியலாம் என்று சொன்னார். முடிவாக அவர் சொன்னது, கிறிஸ்து நம்மை முற்றுமுடிய இரட்சிக்கக்கூடியவர். பெர்சியா தேசத்தில் அழகிய விரிப்புகளை (Carpets) நெய்கிறவர்கள், நெய்யும்போது ஒரு சிக்கல் அல்லது தப்பு ஏற்பட்டால், அதைப் பிரித்துத் திருத்துவதில்லை. அந்தச் சிக்கலை வைத்தே முன்னிலும் அழகிய விரிப்பை உண்டுபண்ணுவார்களாம். அதுபோல நமது சிக்கல்களும் தீட்டுகளும் உள்ள சீவியத்தைக் கடவுள் ஆச்சரியமாக நன்மைக்கேதுவாக மாற்றுகிறார். போதகர் ரத்னனாயகம் வாலிபருக்குப் பேசுகையில், தான் சில வருஷங்களாகப் பேராதெனிய சர்வகலாசாலையில் போதகராகக் கடமையாற்றியதால், வாலிபருக்காகப் பேசத் தமக்கு உரிமை உண்டு என்றார். சர்வகலாசாலையில் அநேக வாலிபரின் தனிமையையும், அவர்கள் தங்களுக்கு யாராவது இரக்கம் பாராட்ட எதிர்பார்க்கிறார்கள் என்றும் கூறினார். ஆகவே வாலிபர் தங்கள் வாழ்க்கையில் அமைதியையும், இரக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்றார். தாய்மாருக்குப் பேசுகையில், வாலிபப் பெண்கள் அழகாயிருப்பது இயற்கை. ஆகிலும் அறுபது வயதுக்கு மேற்பட்ட பெண்களும் அழகாயிருக்கக்கூடும். அவர்களுக்கு அழகு கொடுக்கிறவர் பரிசுத்த ஆவியானவர் என்றார். தாய்மார் ஆண்டவரைப் போற்றுவதிலும், அன்பு பாராட்டுவதிலும் உற்சாகமாயிருக்க வேண்டும் என்றார். அதுவே அவர்களைப் பரலோக வாழ்வுக்கு ஆயத்தப்படுத்தும் என்றார். 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உற்சவ ஆராதனையில் பாடகர் பவனியும், நற்கருணையும், பிரசங்கங்களும் இடம்பெற்றன. ஆராதனைக்குப் பின் சபையார் எல்லோரும் சபை மண்டபத்தில் ஒன்று கூடி அந்நியோன்னிய காலைப் போசனத்தில் பங்குபற்றினர். அன்று மாலை நடந்த தெய்வீக சுகமளிக்கும் ஆராதனையிலும் பெரும்பாலானோர் பங்குபற்றினர் வியாதியஸ்தர் திருப்பீடத்தண்டை வந்து முழங்கால் படியிட, போதகர்மார் அவர்கள் மேல் கைகளை வைத்துச் சுகத்திற்காக ஜெபித்தனர்.

பின்பு எல்லாரும் சேர்ந்து தங்கள் வாழ்க்கையைக் கடவுளுக்குப் படைக்கும் ஜெபத்தைச் சொன்னார்கள். பின்பு "என்தன் ஜீவன் இயேசுவே, சொந்தமாக ஆளுமே" என்ற பாட்டுப் பாடப்பட்டது. சேகர போதகர் ஆசீர்வாதம் கூற விழா முடிவடைந்தது.

---

## வண. மைரன் உவின்சிலோ

வண. மைரன் உவின்சிலோவும், திருமதி ஹரியற் உவின்சிலோ அம்மையாரும், அமெரிக்காவிலிருந்து இரண்டாவதாக வந்த மிஷனரிமார் குழுவைச் சேர்ந்தவர்கள். இக்குழுவினர் 1819-ம் ஆண்டு "இந்தஸ்" என்னும் கப்பலில் ஐந்தரை மாதம் பிரயாணம் செய்து இலங்கையை வந்தடைந்தனர்.

உவின்சிலோ தம்பதியர் ஸ்போல்டிங் தம்பதியருடன் உடுவிலில் பணியாற்ற நியமிக்கப்பட்டனர். வட்டுக்கோட்டைச் செமினரியின் ஸ்தாபகர்களில் ஒருவராக மைரன் உவின்சிலோ விளங்கினாலும் உடுவிலில் உவின்சிலோ தம்பதியர் ஆற்றிய பணியே மகோன்னதமானது. தமிழ்ப் பெண்கள் ஈடேற்றத்திற்கென அவர்களுக்கென ஒரு பாடசாலையை ஆரம்பிப்பதில் உவின்சிலோ தம்பதியர் ஏனைய மிஷனரிமாருடன் ஈடுபட்டுழைத்தனர். 1824-ம் ஆண்டு உடுவில் மிஷன் வளவிற்குள் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. திருமதி ஹரியற் உவின்சிலோ இதன் முதலாவது அதிபராகப் பணியேற்றார். ஆனால் 1833-ம் ஆண்டு திருமதி ஹரியற் உவின்சிலோ இறந்து போகவே வண. உவின்சிலோ தமது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு அமெரிக்காவுக்குப் பயணமானார். மறுமணம் செய்து கொண்டு 1836-ம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த மிஷனரிமார் சென்னையிலும் தமது பணியை ஆரம்பித்து நடத்த விழைந்தனர். யாழ்ப்பாணத்தைத் தமது தளமாக மிஷனரிமார் தெரிந்து கொண்டமைக்கு அது இந்தியாவில் பணிபுரிய ஏற்றதொரு படிக்கல்லாக அமையும் என்ற எண்ணமும் காரணமாக அமைந்தது என்பதும் 1832ம் ஆண்டில் டானியல் புவரைத் தலைவராகக் கொண்ட மதுரை மிஷன் ஆரம்பிக்கப்பட்ட தென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் 1836-ம் ஆண்டு சென்னையில் மிஷன் ஆரம்பிக்கு முகமாக டாக்டர் ஜோன் ஸ்கடரும் வண. மைரன் உவின்சிலோவும் அனுப்பப்பட்டனர். வண. உவின்சிலோ சென்னையிலுள்ள இராயபுரத்தில் தங்கி அங்கு ஒரு பெரிய அச்சியந்திரசாலையை அமைத்தார். துண்டுப்பிரசுரங்கள், வேதாகமப் பகுதிகள் என்பனவற்றை அச்சிட்டு மக்களுக்கு வழங்கினார். தமிழ்ப்பாடசாலைகளையும் அமைத்து நடத்தினார்.

இக்கால கட்டத்திலே தான் மைரன் உவின்சிலோ தமது பாரிய தமிழ் — ஆங்கில அகராதியைப் பதிப்பித்தார். வண. உவின்சிலோவின் துண்டுப்பிரசுரங்களுக்கு எதிராக சென்னையில் இருந்த சதுர்வேத சித்தாந்த சபையார் கண்டன நூல்களை எழுதி வெளியிட்டனர்.

1864-ம் ஆண்டு வண. உவின்சிலோ சுகவீனமடைந்து அமெரிக்கா செல்ல முடிவுசெய்தார். ஆனால் கப்பல் நன்னம்பிக்கை முனையை அடைந்த பொழுது உலக வாழ்வை நீத்தார். இறக்கும் பொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து.

---

## "பலதும் பத்தும்"

*சீவியமும் ஊழியமும்*

ஊழியத்தின் மூலம் சீவியம் பரிசுத்தமடைகிறது. பரிசுத்த சீவியத்தால் ஊழியம் பலன்படுகிறது. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று உதவியாய் ஒன்றை ஒன்று தாங்குகின்றன

— புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

*மனிதர் தேடுங் காரியங்களிலும் இழந்த காரியங்களே அதிகம்.*

இங்கிலாந்து தேசத்தில் 19-ம் நூற்றாண்டில் சீர்திருத்தம் செய்த யோன் றஸ்கின் என்பவர் மனிதர் எதற்கு வருந்துகிறார்கள் என்றதல்ல எதை இழந்தார்கள் என்பதே எனக்குத் துக்கமும் ஆச்சரியமுமாய் இருக்கிறது என்றார்.

— பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது

*காலங்களும் காரியங்களும்; கொலம்பியா சர்வகலாசாலை யாசிரியர் ருெபின்சன் வெளியிட்டது.*

ஆரியசாதி மேற்கேயும் கிழக்கேயும் பரவியது 20 நிமிஷத்திற்கு முன். வேதங்கள் எழுதப்பட்டது 15 நிமிஷத்துக்கு முன், புத்தர், சொருய்ஸ்துக், கொன்வியூசிஸ் என்பவர்கள் 6 நிமிஷத்துக்கு முன். கிறிஸ்துவின் சீவியம் 5 நிமிஷத்துக்கு முன். நன்நம்பிக்கை முனைப் பாதை ஒரு நிமிஷத்துக்கு முன். இந்து தேச முன்னேற்றம் 5 நிமிஷத்துக்கு முன். மேலைத்தேசத்தார் மரப்பட்டை தரித்தல் 5 நிமிஷத்துக்கு முன். தற்கால மிஷன் உற்பத்தி சில செக்கனுக்கு முன்.

— ருெபின்சன் கால சக்கரத்தைச் சம்பவங்களில் வகுத்து வெளியிட்டது.

*மார்க்க விஷயத்தில் விசாலமான எண்ணம்.*

ஆதி காலத்தில் பல சாதிகளுக்குள்ளும் தம்மைப் பற்றிய அறிவைப் பங்குபங்காய் வகைவகையாய்ப் பாடசாலைகளில் கேட்டின்ஸ்களாக் வகுக்கப்பட்ட அறைகளில் வேறுவேறாய்த் தம்மை வெளிப்படுத்திப் பின் காலங்கள் வந்தபோது தட்டிகளை எல்லாம் எடுத்து இனி நீங்கள் போய்க் கலந்து ஒவ்வொரு பகுதிக்கும் நான் வெளிப்படுத்திய வைகளை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொடுத்துப் பூரண அறிவைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் என்று சொன்னார்.

— வேனுட் லுக்கஸ் என்பவரின் வாக்கு.

*ஒவ்வொரு சாகியத்தாரின் போதனை.*

1. கிரேக்கர்: உன்னைத்தானே நீ அறிந்து அடங்கியிரு.
2. உன்னை நீயே ஆளுவதற்குரிய வல்லவனாயிரு.
3. கொன்வியூசியம்: உன்னை நீயே திருத்தி மேன்மையாக்கு.
4. ஜெமினம்: உன்னை நீயே அடக்குவதனால் பக்தனாயிரு.
5. இந்துசமயம்: உன்னை நீயே பிரித்து மேலான வஸ்துவில் கலந்து கொள்.
6. புத்தம்: உன்னை நீயே ஆராய்வதால் நிர்வாண நிலையை அடை.
7. உன் கீழ்ப்படிவினால் உனக்கு உறுதி நிலையைப் பெறு.
8. யூதமார்க்கம்: பரிசுத்தனாய் இருப்பதினால் உன்னைத் திடப்படுத்து.
9. லோகாயதம்: நீ முயற்சியாயிருந்து சந்தோஷத்தை அனுபவி.
10. கலைக்கியானம்: உன்னைப் பண்படுத்துவதினால் விசால மனம் அடை.
11. கிறிஸ்து மார்க்கம்: கிறிஸ்துவைப்போல் ஆக உன்னையே கொடு.

*உலகத்தில் பேர்பெற்ற ஏழு வைத்தியர்.*

1. சூரியப்பிரகாசம்
2. தண்ணீர்
3. இளைப்பாறுதல்
4. ஆகாயம்
5. சந்தோஷம்
6. அப்பியாசம்
7. சுகத்திற்கேற்ற போசனம்.

*கிறிஸ்து சமயம் இந்தியாவின் மார்க்கமாக நாலு முறை.*

ஸ்ரான்லி யோன்ஸ் பண்டிதர் காந்தி அடிகளிடம் கிறிஸ்து மார்க்கம் இந்தியாவின் மார்க்கமாய் வரச் செய்யவேண்டியதென்ன எனக் கேட்டபோது காந்தியடிகள் பின்வருமாறு பதிலளித்தார் :

1. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சீவியத்தைப் பின்பற்றவேண்டும்.
2. கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மார்க்கத்தை எந்த வழியசயாவது கேவலப்படுத்தக் கூடாது.
3. கிறிஸ்து மார்க்கத்தின் மத்திய சத்தியம் உணர்ச்சியின் அன்பாயல்லக் கிரியை செய்யும் அன்பாய் இருக்க வேண்டும்.
4. கிறிஸ்தவர்கள் இதர மார்க்க சத்தியங்களைக் குற்றங் கண்டு பிடிக்கவல்ல, உண்மையை அறியும் ஆவலோடு படிக்க வேண்டும்.

— மகாத்மா காந்தி

(Rev. E. K. Y. Notes.)

---

## காரைநகர் சபை நூற்றியிருபத்தைந்தாண்டு விழா

காரைநகர் திருச்சபையின் நூற்றியிருபத்தைந்தாண்டு நிறைவை யொட்டி ஒரு நன்றி செலுத்தும் ஆராதனையும், பகிரங்கக் கூட்டமும் சென்ற சனிக்கிழமை (9-8-1980) பி. ப 4.00 மணிக்கு காரை நகர் ஆலயத்தில் நடைபெற்றது. சபைப் போதகர் வண. எஸ். மனோபவன் வழிபாட்டினை நடத்தினார். அதிபட்சர் மகா கனம் D. J. அம்பலவாணர் அருளுரை வழங்கினார்.

நன்றி செலுத்தும் ஆராதனையைத் தொடர்ந்து தேனீர் உபசாரணையும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. தவாலி நகைச்சுவை நடிகர் இன்பராசாவின் "ஹூஸ் மாஸ்ரர்" என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

*EDITORIAL*

## Education and Development

No conference held in recent times at the BMICH in Colombo, has been so timely as the Eighth Commonwealth Conference on Education, which concluded two days ago.

Identifying ways and means by which *the human resources* of the 1000 million people of the Commonwealth (a quarter of the world's population) could be improved through Education was the main task of the Conference — a task conceived against the backdrop, as Shidath Ramphal, the Secretary-General put it, "*of economic crisis and stringency and ever rising expectations and needs.*"

In the context of the accelerated development blueprint in Sri Lanka, the contemporary educational scene presents to the government challenges of immense magnitude.

The 3.2 million student enrolment in government schools (there are more girls than boys) has a disonal record of 70 per cent drop-out at the crucial age of about 14.

Of those who succeed in going through 'the pipe-line', some two million end up as unemployed or unemployable. Good Education and a good job are no longer securely conjoined.

The 132,000 teachers in our schools (30 to 35 students per teacher) seem to have now become "passengers", to borrow an expression from the Minister of Trade and Shipping who has used it to describe the employees in his own ministry.

At the time of writing these notes, a team of Education Officials from the Gulf States have just left the island after holding Interviews in various parts of the island, for recruitment of teachers, particularly those qualified in Science and Mathematics, for employment in Middle East countries.

The turn-out at these Interviews is reported to be an all time record — a grim pointer to the extent to which Inflation in the country has afflicted a 'tribe' proverbial for the equanimity with which they have always struggled through lean financial times.

As to the 'content' of Education, a common malady in most commonwealth countries today is what Mr. Ramphal, the Secretary-General of the Commonwealth, describes as the *Diploma Disease*, an expression signifying the kind of examination-oriented education which lays scant value on the development of practical skills and attitudes.

Sri Lanka has not been an exception. The CDN of 11-8-80 which features the Eighth Commonwealth Education Conference in a full page supplement, has chosen for its leading article the subject of 'Private Tuition' — an educational offshoot in Sri Lanka which the *Nation* of 8-8-80 describes in facetious terms as "the fourth largest industry after Tea, Rubber and Coconut.

According to recent statistics, parents in Sri Lanka spend 22 per cent of their income on this process of "rote-learning" with 90 per cent of Advanced Level Science students patronising these courses.

In this backdrop of Education in Sri Lanka, what does the theme "*Education and the Development of Human Resources* connote to us in this small country of 15-75 million people? "Vision", it is said "is seeing more than meets the eye." What is our vision in Education for the 21st century?

In our own context, as a develbping country Tanzania (with its population of 17.5 million) which has achieved considerable success in making "Education for self-reliance" not merely a dream but a reality, comes uppermost to our mind.

The Tanzanian Minister of National Education has disclosed at the BMICH Conference, during her recent visit, that while *Swahili* the indigenous language is the medium of instruction in the primary clasees, *English* is the medium of instruction in the Secondary Schools and at the University.

Yet the educational policy does not negate Tanzanian emphasis on development, based on its own traditional culture.

If Education is to be a resource generator in Sri Lanka, we have to formulate first our own *clear-cut, realistic goals* of development to which education has to be geared.

'Development' in our country at the moment seems to be in the grip of some hard realities — escalating oil prices, global recession and restrictive western policies.

What is at issue during the Third United Nations Development Decade (1980 — 1990) and beyond, is the direction in which Third World countries can move, to put a halt to increasing poverty which engulfs many of these countries. The "twin crutches" of foreign expertise and foreign aid are, in this context, of dubious value for, it is the people who have to be the beneficiaries of the new wealth which the country creates.

The overall picture remains hazy. Great care has to be taken not to increase the expectations of people more than it is feasible to satisfy in the short and long terms.

## Dr. Charles Rajadurai Kanagasundaram

by

**Dr. A. J. Wilson**

The death occurred on Saturday 5th July at Newcastle upon Tyne, General Hospital, of Dr. Charles Rajadurai Kanagasundaram, Senior Consultant Eye Surgeon at the Newcastle General Hospital. Dr. Kanagasundaram leaves behind his wife, Suhunam, daughter of Mr. and Mrs. E. V. Ponnuthurai, (Mr. Ponnuthurai being the younger brother of the late Mr. S. J. V. Chelvanayakam) a son, Suren and a daughter, Savithri. He was the son of the late Gate - Muhandiram Dutton Kanagasundaram and is survived by his mother Mrs. C. G. Kanagasundaram and a brother, Dr. Richard. J. Kanagasundaram (New Zealand).

Dr. Charles Kanagasundaram established his reputation at the Midlands of Great Britain at the Royal Eye Infirmary, Wolverhompton. His skills as a surgeon were widely valued in the Midlands and his name had acquired a legendary significance when he decided to move, in the early sixties to the Newcastle General Hospital as its Senior Consultant Eye Surgeon. He become wel known for his surgical techniques in the Northeastern parts of Great Britain. *The Evening Chronicle*, the leading newspaper in Northern Britain, noted in an obituary that "he was known internationally for his corneal graft work." Shortly before his untimely death, Dr. Kanagasundaram had been requested by the Newcastle Health Authority to be the Senior officer in charge of the proposed new eye infirmary for the Newcastle area.

Dr. Kanagasundaram was not only an eminent surgeon. He was a master-craftsman who was in his spare time on engineer of considerable acumen. He had patented a number of inventions that had to do with improvement of the sight. But more importantly, at the time of his death., he was on the eve of a discovery which could have revolutionized eye surgery which could have given immense relief to numerous sufferers. He was in addition to all this a gifted photographer and this special talent combined with his knowledge and aptitude for engineering gave him unbeatable skills in his chosen vocation. He had many hobbies, one of which was being a glider-pilot. In a short life time, he was surgeon, engineer, photographer, glider-pilot and a Tamil patriot.

What the Tamil people will remember him most for, was the unique contribution be made to the work of a Tamil organisation called S. C. O. T. — the Standing Committee of the Tamil People. The organisation stood for the economic improvement of the Tamil speaking people and launched many a project in the Tamil areas from its London - based centre. Kanagasundaram was its moving spirit, the keeper of its finances and was lookεd upon by his colleages for his safe and sober advice on the feasibility of projects.

In his home life he was a loving father closeiy attached to his young children. His matrimonial life, from one who observed him during that phase, and from one who, knew him even before, from 1940, could only be described in two words "deliriously happy".

The Service was conducted at the Methodist Chapel, Newcastle upon Tyne on Sunday 6th June by the Reverend Stone. A memorial service in appreciation for all that he had done for the people of North Britain was held by his colleagues at the Hospital Chapel in Newcastle General Hospital on 18th August. The Tamil community in London and its outskirts had a memorial service at Putney on 13th July. In Colombo, a service was held in the residence of Dr. Kanagasundaram's uncle, Dr. J. S. Barr Kumarakulasinghe, at Mount Lavinia by Rev. J. J. Ratnarajah on Friday 18th July. The service prior to the interment of the ashes was held at the Tellippalai C. S. I. Church on Sunday 20th July at 4 15 p. m. by the Rev. D. R. Ampalavanar.

Dept. of Political Science
University of New Brunswick
Canada.

## Junior School Sports Meet

*(Continued from first page)*

great deal in making the Exhibition held by the Lions Club at the College a great success. The Principal congratulated Mr. Thevakadadcham for his very efficient organisation of the Meet.

From then onwards for the next four hours the Bicknell grounds was one of feverish activity with the varied and colourful items for Boys and Girls.

Another noteworthy feature introduced this year was the giving away of the certificates to the winners on the completion of each event by Retired Teachers, prominent citizens and Education Officials who graced the occcsion. Only the trophies and Championship Cups were handed over at the end of the Meet by Mrs. Arunasalam.

Mr. Arunasalam in his speech congratulated the winners and the individuals and complimented the Organisers for the very high standard of the Meet and especially their thought to plan this "mini olympics" which was educational as well as recreational. He also impressed on both the children as well as the parents the need to co-ordinate both studies and sports in the lives of their Wards.

Hasting House emerged Champions with 495 points with Abraham House following with 464 points. — *Cor.*

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/8920/78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philp Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 15th August, 1980.